023899
-7 SEP 2020

2997
1/10/2020

சுருக்கம்

பணியமைப்பு – கருவூலக் கணக்குத் துறை – செல்வி S.கனிமொழி, இளநிலை உதவியாளர், கரூர் மாவட்டக் கருவூல அலகு – கருணை அடிப்படையில் 01.02.2019 மு.ப. முதல் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை – ஆணை –வெளியிடப்படுகிறது.

---

**நிதி (கருவூலக் கணக்கு – 2)த் துறை**

**அரசாணை (3ப) எண் : 12**

**நாள். 01.09.2020**
**சார்வரி, ஆவணி – 16,**
**திருவள்ளுவர் ஆண்டு –2051,**

**படிக்கப்பட்டது:**

1. கரூர் மாட்டக் கருவூல அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைஎண்.880/2017/**அ1,** நாள் 30.01.2019.
2. முதன்மைச் செயலர்/ கருவூலக் கணக்கு ஆணையரின் கடித ந.க. எண்: 35508/ சி4/2020, நாள் 12.02.2020 .
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (மற்றும்) வேலைவாய்ப்புத் (க்யூ–1) துறை, நாள்.23.01.2020.

********

**ஆணை :**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட முதன்மைச் செயலர் / கருவூலக் கணக்கு ஆணையரின் கடிதத்தில், கருவூலக் கணக்குத் துறையில் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளராக பணியாற்றிய திரு த.சரவணன் அவர்கள் 23.07.2015 அன்று பணியிலிருக்கும் போது மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர் மற்றும் மகளுமாகிய செல்வி S.கனிமொழி என்பவர், கருணை அடிப்படையில், கரூர் மாவட்டக் கருவூல அலகில் பணியமர்த்தப்பட்டு, 01.02.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பில் பொதுத் தேர்வில் தேர்ச்சிப் பெற்றுள்ளார் என்றும், பணியேற்பு செய்த நாளில் நிர்ணயிக்கப்பட்ட வயதினை நிறைவு செய்துள்ளார் என்றும், அவரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும் தெரிவித்ததுடன், கரூர் மாவட்டக் கருவூல அலகில் பணிநியமனம் பெற்ற

..2...

செல்வி S.கனிமொழி, இளநிலை உதவியாளரின் பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாளான 01.02.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

2. பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட செயல் முறை ஆணையில் செல்வி S.கனிமொழி, (காலஞ்சென்ற திரு த.சரவணன், கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளரின் மகள்) கருணை அடிப்படையில், தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டார். மேலும் அச்செயல்முறையின்படி தனியர் கரூர் மாவட்டக் கருவூல அலகில் இளநிலை உதவியாளராக 01.02.2019 முற்பகல் முதல் தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறார்.

3. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட முதன்மைச் செயலர் / கருவூலக் கணக்கு ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஓராண்டிற்கு மேலாகப் பணிபுரிந்து வரும் செல்வி **S.**கனிமொழி, இளநிலை உதவியாளரின் தற்காலிகப் பணிநியமனம் இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும்படியாக உள்ளதாலும் கருணை அடிப்படையிலான நியமனம் மற்றும் அப்பதவிக்குரிய அனைத்துத் தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும் செல்வி **S.**கனிமொழி, அவர்களின் பணியினை தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–ல் பிரிவு 28–ன் உட்பிரிவு (1)–ன்படி தனியர் பணியேற்ற நாளான 01.02.2019 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதன் மூலம் ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றினைப் பெறத் தகுதியுடையவராகிறார். மேற்கண்ட தனியர் பொருட்டு தமிழ்நாடு கருவூலக் கணக்குத் துறை பணிவிதிகளின்படி அன்னாருக்கு தகுதிகாண்பருவம் துவங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதும் இருப்பின் அது குறித்து தக்க செயல்முறை ஆணை முதன்மைச் செயலர்/கருவூலக் கணக்கு ஆணையரால் வெளியிடப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

4. இவ்வரசாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அ.சா.எண்.10788/க்யூ1/2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்த துறை அ.சா.எண்.19088/ஜி2/2020 –இன் இசைவுகளுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**S.கிருஷ்ணன்**

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

<u>பெறுநர்</u>:–

**செல்வி** S.**கனிமொழி**, இளநிலை உதவியாளர்,

கரூர் மாவட்டக் கருவூல அலகு, (பணிப்பதிவேடு

மற்றும் அனைத்து மூலச்சான்றிதழ்கள், **துறைத் தலைவர் வழியாக**)

முதன்மைச் செயலர்/ கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–35.

செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.

**<u>நகல்</u>**

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை – 9.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை – 9.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// **ஆணைப்படி / அனுப்பப்படுகிறது** //

**பிரிவு அலுவலர்**

ப.ா. [signature] 1.9.2020

மே.கு.ந.க. எண். 4034/2020/அ1, நாள்: 01.10.2020
நகல் சார்பு செய்யப்படுகிறது.

[signature] 1/10/2020
Treasury Officer,
District Treasury
Karur

[signature] 01.10.2020 [signature] 1.10.2020

பெறுநர்-
செல்வி. சு. கனிமொழி, இ.நி.உ., மா.க. கரூர்

பெற்றுக்கொண்டேன்
S. கனிமொழி
1/10/2020.

**கருவூல அலுவலர் , மாவட்டக் கருவூலம் , கரூர் அவர்களின் செயல்முறை ஆணை**
**முன்னிலை: திரு.க.இரவிச்சந்திரன் M.Sc.,B.Ed.**

ந.க.எண்: 4034 /2019/அ1அ

நாள்: 07.10.2020

| | |
|---|---|
| பொருள்: | பணியமைப்பு- கருவூல கணக்கு சார்நிலைப்பணிகள்- கரூர் மாவட்டக் கருவூல அலகு-செல்வி.ச.கனிமொழி, இளநிலை உதவியாளர், மாவட்டக் கருவூலம் , கரூர்- பணிவரன்முறை மற்றும் 2020-ம் ஆண்டுக்கான ஊதிய உயர்வு — நிலுவைத் தொகை வழங்குதல் - ஆணை-தொடர்பாக |
| பார்வை: | 1.அரசாணை நிலை 3(ப) எண்.12இ நிதி (கருவூலக் கணக்கு-II)த்துறை, நாள்:01.09.2020.<br>2.ஆணையர், கருவூலக் கணக்குத் துறை, சென்னை அவர்களின் செ.மு.ந.க.எண்.35508/சி4/2020, நாள்:21.09.2020 |

****************

ஆணை:

பார்வை 1-ல் குறிப்பிட்ட அரசாணை நிலை 3(ப) எண்.12இ நிதி (கருவூலக் கணக்கு-II)த்துறை, நாள்:01.09.2020.-ன் படி செல்வி.ச.கனிமொழி, இளநிலை உதவியாளர், மாவட்டக் கருவூலம், கரூர், அவர்களுக்கு 01.02.2019 மு.ப பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டதை தொடர்ந்து 2020-ம் ஆண்டிற்கான முதல் ஆண்டு ஊதிய உயர்வு வழங்க இதன் மூலம் ஆணை வழங்கலாகிறது.

7/10/2020

கருவூல அலுவலர்
கரூர்

பெறுநர்:

1.செல்வி.ச.கனிமொழி, இளநிலை உதவியாளர், மாவட்டக் கருவூலம் , கரூர்

நகல்:

1.பட்டியல் பிரிவு (அ2)
2 .பணிப் பதிவேடு .